From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 185 /2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramalingam | Father/Husband Name | : Rajamanickam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அ.செட்டியார்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும், அவர்கள் என் உறவினர்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பகல் 3 மணியளவில் எங்கள் ஊர் மந்தையில் அரசு இலவச மிக்சி கிரைண்டர் கொடுத்ததால் அங்கு நாங்கள் இருந்தோம். அப்போது 1வது எதிரி எங்களை அங்கு நிற்கக்கூடாது என்று சொன்னார். அதன்பிறகு 2-வது எதிரி செல்வம் என்பவர் அங்கு குடிபோதையில் வந்து என் மாமாவுடன் ஏன் சண்டைபோட்டாய் என்று சொல்லி கத்தியை வைத்து என் இடதுபக்க காதின் பின்புறத்தில் கத்திய்ன பின்புறத்தால் திருப்பி அடித்ததில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அதுகேள்விப்பட்டு வந்த என் மகனை கத்தியால் 2-வது எதிரி செல்வம் குத்தவந்தபோது என் மகனின் நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது துரை, வெள்ளிமலை மற்றும் அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டனர், அப்போது எதிரிகள் எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். பின்னர் நாங்கள் ஆட்டோவில் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலீசார் மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னனுடையதுதான். அந்தப்புகார் அ.சா.ஆ.1 ஆகும். மருத்துவமனையில் சுமார் 4, 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 185 /2020

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Kalaimani | Father/Husband Name | : Ramalingam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அ.செட்டியார்பட்டியில் வசிக்கிறேன். வேன் ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. எதிரிகளை தெரியும், அவர்கள் என் உறவினர்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பகல் 2.30 அல்லது 3 மணியளவில் எங்கள் ஊர் மந்தையில் 1வது எதிரியும் என் அப்பாவும் வாய்ச்சண்டைபோட்டு அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். அதன்பிறகு 2-வது எதிரி செல்வம் என்பவர் அங்கு குடிபோதையில் வந்து என் அப்பாவை ஏன்டா மாமாவுடன் ஏன் சண்டைபோட்டாய் என்று சொல்லி கத்தியை வைத்து என் அப்பாவின் இடதுபக்க காதின் பின்புறத்தில் கத்தியை பின்புறத்தால் திருப்பி அடித்ததில் என் அப்பாவிற்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அதுகேள்விப்பட்டு வந்து கேட்ட என்னை கத்தியால் 2-வது எதிரி செல்வம் குத்தவந்தபோது எனது இடதுபக்க நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது துரை, வெள்ளிமலை மற்றும் அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டனர், பின்னர் நாங்கள் ஆட்டோவில் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலீசார் மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்திலுள்ள அறிவேன்சாட்சி கையெழுத்து என்னனுடையதுதான். மருத்துவமனையில் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 185 /2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Duraipandi | Father/Husband Name | : Nagarathinam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அ.செட்டியார்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 3 மணியளவில் செட்டியார்பட்டி மந்தையில் வைத்து ரேசன் கடையில் இலவச மிக்சி கிரைண்டர் போன்ற பொருட்கள் கொடுத்துக்கொண்டிருந்தார்ள். அப்போது அ.சா.1-ம் 2-வது எதிரியும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். 2-வது எதிரி கத்தியின் பின்புறத்தால் அ.சா.1-ன் தலையில் அடித்து இரத்தக்காயப்படுத்தினார். பின்னர் அ.சா.1-ன் மகன் கலைமணி என்பவர் வந்து கேட்டபோது செல்வம் என்பவர் அ.சா.2ஐ கத்தியின் பின்புறத்தால் அடித்ததில் அவரது நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது நாங்கள் விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 185 /2020

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Vellimalai | Father/Husband Name | : Poosari |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அ.செட்டியார்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா1 மற்றும் எதிரிகளையும் தெரியும், என் உறவினர்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 2.30 மணியிலிருந்து 3 மணியளவில் செட்டியார்பட்டி மந்தையில் நாங்கள் இருந்தபொது 2-வது எதிரி செல்வம் என்பவர் அ.சா.1-ஐ கத்தியை வைத்து இடதுபக்க காதுக்கு பின்புறம் அடித்தார். பின்னர் விலக்கிவிட வந்த அ.சா.2-ஐ 2-வது எதிரி கத்தியால் அடித்து இடதுபக்க நெற்றியில் இரத்தக்காயம் ஏற்படுத்தினார். அப்போது நாங்கள் விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.